IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 140/2013
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலாஜி | Caste | : | |
| Father Name | : | தாமோதரன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22nd day of October, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

1. ராஜி மேஸ்திரி ஆனவர் தங்களுக்கும் என்னுடைய அப்பாவின் தாமோதரனுக்கும் தாமோதரனுடைய அண்ணன் சாம்பசிவம் என்பவருக்கும் தானப் பத்திரம் எழுதிகொடுத்ததாக நான் என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் குறிப்பிட்டுள்ளேன். தானப் பத்திரம் எழுதியவர் ராஜி மேஸ்திரி என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

2. ராஜி மேஸ்திரினுடைய அப்பா பெரியப்பு என்பவருக்கு தான பத்திர எழுதிகொடுக்கப்பட்ட சொத்து மற்றும் தாவா சொத்து உரிமையானது என்று சொன்னால் தவறு ராஜி மேஸ்திரி சுயமாக சம்பாதித்ததாகும். நான் சொல்வதுபோல் ராஜி மேஸ்திரி சுயமாக சம்பாதித்த சொத்து அல்ல என்று சொன்னாலும் பெரிய அப்புக்குதான் சொத்து சொந்தமானது என்று சொன்னாலும் சரியல்ல (மேற்படி கேள்வி வாதி வழக்கறிஞரால் ராஜி மேஸ்திரிதான் சொத்தின் உரிமையாளர் என்று ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதற்கு அப்பால் வாய்மொழியாக மேற்படி கேள்வி கேட்க முடியாது என்று ஆட்சியபனை செய்யப்படுகிறது)

3. என்னுடைய அப்பாவிற்கு எழுதப்பட்ட இரண்டு தான பத்திரத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட சொத்து விவரத்தை தான் இந்த வழக்கின் சொத்து விவர பட்டியலில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் எனது பெரியப்பா சாம்பசிவத்திற்கு தான பத்திரத்தின் மூலம் கொடுத்த சொத்தின் விவரத்தைதான் என்னுடைய வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

4. சாம்பசிவத்தினுடைய சொத்தை பற்றி நான் சொத்தின் அட்டவணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். 12.04.1973 அன்று ராஜி மேஸ்திரி அவர்கள் முதல் பிரதிவாதிக்கு எழுதிய உயில் செல்லத்தக்கது அல்ல என்றுதான் என்னுடைய பரிகாரத்தில் கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

5. மேற்படி ராஜி மேஸ்திரியினுடைய சொத்து விவரத்தை தாவா அட்டவணை சொத்தில் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பதிவுத்துறையில் கேட்டபோது அவர்கள் கொடுக்கவில்லை அதனால் நான் குறிப்பிடவில்லை. 02.04.1974 அன்று ஆதியம்மாளிடம் சில சொத்துக்களை நான் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் அது எனக்கு நினைவில்லை. அதில் சர்வே எண். 274 ல் 36 சென்ட் ஆவண எண்.1171 மற்றும் சர்வே எண்.275 ல் 46 சென்ட் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. பின்னிட்டு பிரதிவாதியின் வழக்கறிஞர் நான் வாதியை சொல்லவில்லை வாதியின் தகப்பனார் தாமோதரனை குறிப்பிட்டுதான் கேட்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார்.

6. மேற்படி அதே ஆவணத்தில் சர்வே எண்.285/2ல் கிணறு, பம்புசெட் இவைகளில் 1/3 பாகம் என்னுடைய அப்பா பதிவு கிரைய பத்திரத்தின் மூலம் வாங்கியுள்ளார் என்று சொன்னால் அந்த ஆவணத்தை பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி ஆவணத்தில் 12.04.1973ல் எழுதிய புத்தகம் 3ல் வாலுயூம் 105, 106 பக்கங்களில் 1973 வருடத்திலேயே 18 எண்ணாக பதிவு செய்யப்பட்ட உயில் சாசனப்படியில் அதன் சரத்துப்படியும் ராஜி மேஸ்திரி காலமான பிறகு அது முதல் என்னுடைய சுவாதீன அனுபவ பாகத்தில் இருந்துவரும் சொத்தை இன்று தேதிவரையில் நான் தங்களுக்கு கிரயம் பேசி கிரைய ரூ.5,000 ரொக்கமாக சேர்த்துவிட்டபடியால் இந்த தேதியில் கிரையம் செய்து விட்டேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது மேற்படி ஆவணம் பொய்யாக தயார் செய்யப்பட்டதாக இருக்கலாம்.

7. என்னுடைய தந்தை தாமோதரன் வாங்கிய அதே சொத்தை 27.03.1993 அன்று மேற்படி ஆதியம்மாளுக்கு கிரையம் செய்துள்ளார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சர்வே எண். 285/2ல் கிணறு, பம்புசெட், மின்சார மோட்டார், மின்கட்டண முன்வைப்புத்தொகை ஆகியவற்றில் 1/3 பாகம் தாமோதரனுக்கு உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 285/2ல் 1/3 பாகம் 1974ல் தாமோதரன் ஆதியம்மாளிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றாலும் பிறகு 1993ல் மீண்டும் கிரையம் கொடுக்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல.

8. சர்வே எண். 285/2ல் 1/3 பாகம் 1974லிருந்து மின்கட்டண வசதி ஆதியம்மாளின் கணவர் விஸ்வநாதன் பெயரில் இன்றுவரை உள்ளது என்று சொன்னால் சரியல்ல, ராஜிமேஸ்திரி பெயரில் தான் உள்ளது. அதன்

EB சர்வீஸ் எண்.7 அதனுடைய Code No.203 என்று சொன்னால் சரியல்ல. (மேற்கண்ட விவரங்கள் பதில் உரையில் இல்லாததால் வாதியின் வழக்கறிஞர் ஆட்சியபனையுடன் அனுமதிக்கப்படுகிறது)

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI